KANTON LUZERN

# Zahnärztliches Kontrollheft

Name

Vorname

Heimatort/Land

Geburtsdatum

Personalien der Eltern oder der gesetzlichen Vertretung

Name

Genaue Adresse

- முகவரி மாற்றத்தை தயவுசெய்து, தபாலுறையின் பின் பக்கம் குறிப்பிடவும்.
- இப் புத்தகம் மாணவர்களின் பாடசாலைக்காலம் முழுவதும் அவர்களிடமிருக்க வேண்டியது. இப் புத்தகத்தை சேதப்படுத்தினால் அல்லது தொலைத்தால் பெற்றோர் கட்டணம் செலுத்த வேண்டும்.
- தயவுசெய்து, உப்பக்கத்திலுள்ள குறிப்புகளை கவனத்தில் கொள்க!

**Dienststelle Gesundheit und Sport** | **gesundheit.lu.*ch***

# வழி காட்டி




1. கல்வியாண்டு ஆரம்பித்தவுடன் ஆசிரியரிடமிருந்து பெற்றோருக்கு, அவர்களது பிள்ளையை வருடாந்த பல் பரிசோதனைக்கு வைத்தியரிடம் விண்ணப்பிக்கும்படி கட்டளை கிடைக்கும். இப் புத்தகம் பெற்றோரிடம் அல்லது பாடசாலையில் இருக்கும்.

2. அரசினர் பாடசாலையில் கல்வி பயிலும் பிள்ளைகளுக்கும் வாலிபப்பருவத்தினருக்கும் வருடத்தில் ஒரு முறை பாடசாலை பல் வைத்தியரிடம் கண்காணிப்புப்பரிசோதனைக்குச் செல்லும் உரிமை இருக்கின்றது. செல்லும் போது, இப் புத்தகத்தை கொண்டு செல்ல வேண்டும். கண்காணிப்புப்பரிசோதனைக்கான செலவை உள்ளூராட்சிமன்றம் பொறுப்பேற்கும்.

3. «கண்டுபிடிப்பு» என்கின்ற இடம் பல் வைத்தியரினால் நிரப்பப்படும். அதே போல் குறிக்கப்பட்ட இடங்களில் குறிப்புகளை எழுதும் வாய்ப்புகளும் உண்டு. இங்கு பற்சூத்தை, பற்சூத்தையுள்ள இடங்களை அடைத்தல், தாடையிலுள்ள குறைபாடுகளை சரிப்படுத்தலுக்கான ஆலோசனை போன்றவையும் எழுதப்படலாம். துளையிடப்பட்ட கடதாசியுள்ள பக்கம், பிள்ளையின் அல்லது வாலிபரின் வதிவிட உள்ளூராட்சிமன்ற நிதி பரிபாலனசபைக்கு அனுப்பப்படும் பல் வைத்தியரின் செலவு பற்றி, ஆசிரியரின் பரிசீலனைக்காக பயன்படுத்தப்படும். பரிசோதனையின் பின் உள்ளூராட்சிமன்றத்துக்கு அனுப்பப்படும் பகுதி கிழித்தெடுக்கப்பட்டு, பல் வைத்தியரின் கட்டணத்துடன்/ஒன்று சேர்க்கப்பட்ட கட்டணங்களுடன் இரண்டாம் தவணைக்கு முன், அந்தந்த உள்ளூராட்சிமன்றங்களுக்கு அனுப்பி வைக்கப்படும்.

4. ஆசிரியரின் பரிசீலனைக்கான பத்திரம், வைத்தியரின் முத்திரையுடன் பெற்றோருக்கூடாக ஆசிரியருக்கு அனுப்பப்பட வேண்டும்.

5. பல் வைத்தியரின் கண்காணிப்புப்பரிசோதனையின் பின், கட்டாய பல்-பரிசோதனை அவசியம் என பூர்த்தி செய்யப்பட்ட பத்திரங்களை, ஆசிரியர்கள் சேமித்து வைப்பார்கள்.

6. ஒரு வேளை குறிக்கப்பட்ட பிள்ளை அல்லது வாலிபன்/யுவதி பல் வைத்தியரின் பரிசோதனைக்கு உட்படுத்தப்படாதிருந்தால், ஆசிரியர் அது பற்றி பாடசாலை அதிபருக்கு அறிவிப்பார். பாடசாலை அதிபர் பிள்ளையை அல்லது வாலிபனை/யுவதியை வைத்தியரிடம் செல்லும்படி வலியுறுத்துவார்.